Thalaivaasal
# தலைவாசல்
Thalaivaasal
எங்கள் பாரம்பரியம்
வீடு 01 | வாசல் 06 | வியாழக்கிழமை | ஒக்ரோபர் 01, 2020

# வன்னியில் வனப் பிரதேசங்கள் தீவிரமாக அழிக்கப்படுகின்றன

## பாதுகாப்புச் செயலாளர் குற்றச்சாட்டு



வன்னி பிரதேசத்தில் வனப் பிரதேசங்கள் தீவிரமாக அழிக்கப்படுகின்றது. இது வன்னிக்கு மட்டுமன்றி முழு நாட்டிற்குள் அபாயகரமானது என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் கமல் குணரட்ண தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கேட்போர் கூடத்தை திறந்து வைத்து உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா மாவட்டத்தில் பல்வேறு சேவைகளை செய்துள்ளோம். இறுதி யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து வந்த மூன்று இலட்சம் மக்களை தங்க வைத்து அவர்களுக்கான நலனோம்பு வேலைகளை செய்துள்ளோம். அந்த காலகட்டத்தில் அவர்களை துரிதமாக மீள்குடியேற்றுவதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுத்தோம்.

அதேநேரம் நிலங்களை இழந்த மக்களுக்கு அவர்களுடைய நிலங்களில் விவசாயம் செய்ய நடவடிக்கை எடுத்தோம். அவர்களுக்கு வீடுகளை கட்டிக்

02

# ஆறு கோடி ரூபா மதிப்புள்ள வலம்புரிச் சங்குகளுடன் நால்வர் கைது



சுமார் ஆறு கோடி ரூபா மதிப்புள்ள டைட்டன் ரகத்தைச் சேர்ந்த வலம்புரிச் சங்குகளுடன் 4 சந்தேக நபர்கள் காலி - இமதுவ பொலிஸாரினால் இன்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

இமதுவ - கொந்த கொட பகுதியில் வைத்து களுத்துறை விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்ட இந்த சந்தேக நபர்களிடமிருந்து 02 சங்குகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

02

# தமிழ்த் தேசியக் கட்சிகளின் வயிற்றில் புளியைக் கரைத்த விக்கி

## தேர்தல் வரவு செலவு அறிக்கை வெளியீடு

தமிழ்த் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்கினேஸ்வரன் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக தங்களிடம் நிதி இல்லை என்றும் நிதியளிக்க விரும்பும்

02

**2020 கணக்கறிக்கை - தமிழ் மக்கள் கூட்டணி**

எமது பகிரங்க வேண்டுகோளுக்கு இணங்க உள் நாட்டிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் எமக்கு கிடைக்கப்பெற்ற நிதி விபரங்களும் இந்நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட எமது தேர்தல் செலவீடுகளும் அடங்கிய வரவு செலவுக் கணக்கறிக்கை இத்துடன் சமர்ப்பிக்கப்படுகிறது.

**கிடைக்கப்பெற்ற நிதி விபரம்**

1. உள்நாட்டு அன்பர்களின் வரவு ரூபா 1451400.00
2. வெளிநாட்டு அன்பர்களின் வரவு ரூபா 7364911.60 **8816311.60**

**தேர்தல் செலவு விபரம்**

| | | |
|---|---|---|
| 1. எரி பொருள் | 91280 | 00 |
| 2. இடை நேர் செலவு | 90436 | 00 |
| 3. வெளி மாவட்டங்களுக்கு சென்று வந்த வாகன வாடகை | 82200 | 00 |
| 4. கூட்டச் செலவுகள் | 54940 | 00 |
| 5. அச்சடித்தல் செலவு (சுவரொட்டிகள், துண்டுப் பிரசுரங்கள்) | 735130 | 00 |
| 6. மாவட்ட ரீதியாக 5 கூட்டணிக் கட்சிகளின் வேட்பாளர்களின் படங்களுடன் கூடிய பத்திரிகை விளம்பரங்கள் (வீரகேசரி, தினக்குரல், யாழ் தினக்குரல், வலம்புரி, ஈழநாடு, காலைக்கதிர், தினப் புயல்) | 4105400 | 00 |
| 7. காகிதாதிகள்/ Stationary | 57690 | 00 |
| 8. கூட்டங்களுக்கான உபசரணைச் செலவு | 32254 | 00 |
| 9. தேர்தல் பிரச்சாரத்தின் போது கட்சித் தொண்டர்களுக்கான சிற்றுண்டி, மதிய உணவு, குடி நீர் செலவு | 405700 | 00 |
| 10. வேட்பாளர்களுக்கான கொடுப்பனவு | 1700000 | 00 |
| 11. Face Book & Web page Maintenance | 25500 | 00 |
| 12. வங்கிக் கட்டணங்கள் | 2640 | 00 |
| 13. தேர்தல் பிரச்சார வாகனக் கொடுப்பனவு | 129200 | 00 |
| 14. தொலைக்காட்சி விளம்பரங்கள் | 800000 | 00 |
| 15. Online பத்திரிகை விளம்பரம் | 500000 | 00 |

***மொத்த செலவு*** **8812370.00**

வங்கி மீதி **3941.60**

எமது தேர்தல் செலவுகளுக்காக அன்பளிப்புச் செய்த சிலர் தமது பெயர், முகவரி போன்ற விபரங்களை அறியத்தராததால் அவர்களுக்கு முறையான பற்றுச் சீட்டுக்கள் இதுவரை வழங்கப்படவில்லை. எமக்கு நிதி வழங்கி இதுவரை அதற்கான பற்றுச் சீட்டுக்கள் கிடைக்கப் பெறாதவர்கள் தங்கள் விபரங்களை பின்வரும் முகவரிக்கோ அல்லது தொலைபேசி இலக்கத்திற்கோ அறியத் தந்தால் அவர்களுக்கான முறையான பற்றுச் சீட்டு உடன் அனுப்பி வைக்கப்படும்.

**குறிப்பு:** வெளிநாடுகளில் இருந்து கிடைக்கப்பெற்ற 7364911.60 ரூபாயில் 30 இலட்சம் ரூபா நீதியரசர் விக்னேஸ்வரன் அவர்களின் செலவுகளுக்காக அவரது ஆதரவாளர்களினால் அவரின் தனிப்பட்ட கணக்குக்கு அனுப்பப்பட்டு பின்னர் பொதுக்கணக்குக்குள் சேர்க்கப்பட்டு மேற்கூறிய செலவுகளுக்காகப் பயன்படுத்தப்பட்டது.

அனுப்பியவர்கள் பலரின் வேண்டுகோள்களுக்கு அமைவாகவும் தகவல் பாதுகாப்பு காரணங்களுக்காகவும் பெயர் விபரங்கள் இங்கு பகிரங்கப்படுத்தப்படவில்லை.

**முகவரி:** **நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்**
**கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்**
**யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம்**
**232, கோவில் வீதி,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**

**தொலைபேசி இலக்கம்: 021 221 4295**
**மின்னஞ்சல்: cvwoffice18@gmail.com**
**நன்றி**

**நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்**



# இது மக்கள் இயக்கம்!

## இருவரின் சுயநல சுகபோகங்களுக்காக மக்கள் முன்னணியை பலியிட முடியாது



## பொதுச்சபையை கூட்டி முடிவெடுப்பேன் என்கிறார் மணிவண்ணன்

இருவரின் தனிப்பட்ட சுயநல சுகபோகங்களுக்காக தமிழ்த் தேசியப் பேரியக்கமாக வளர்ந்துவரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை பலியிட அனுமதிக்கப்போவதில்லை எனத் தெரிவித்திருக்கும் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன், தனது குடும்ப சூழ்நிலை உள்ளிட்ட காரணங்களிற்காக இம்முறை பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதிலிருந்து ஒதுங்கியிருந்த தன்னை கெஞ்சி மன்றாடி தேர்தலில் போட்டியிட வைத்தவர்கள் தாங்கள் வென்றுவிட்ட மறுகணமே தன்னைத் தூக்கி எறிந்துவிட்டதாகவும் குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

இன்று யாழ்ப்பாணம் கிரீன் கிராஸ் விடுதியில் நடந்த செய்தியாளர் சந்திப்பிலேயே மணிவண்ணன் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

2010ஆம் ஆண்டில் இந்த அரசியல் இயக்கம் ஆரம்பித்ததிலிருந்து, அமைப்பிலிருந்து நீக்கப்பட்ட முதலாவது நபர் நான்தான். வேறுயாரையும் கட்சியை விட்டு நீக்கவில்லை. பாரதூரமான குற்றமிழைத்தவர்கள், கட்சியின் தீர்மானத்தை மீறியவர்களை கூட நீக்கவில்லை. இப்பொழுது என்னை நீக்குவதாக சொல்லப்பட்டுள்ளது.

5.9.2020 திகதியிட்ட கடிதத்தில் என் மீதான குற்றச்சாட்டுக்களை குறிப்பிட்டு, விளக்கம் கோரியதுடன், விசாரணையில் யார்யாரை சாட்சிகளென குறிப்பிட்டு 9 உறுப்பினர்களின் பெயர்களை குறிப்பிட்டு கடிதம் அனுப்பியிருந்தார்கள்.

என்னை நீக்குவதாக அவர்கள் முடிவெடுத்த பின்னர் கண்துடைப்பிற்கு அவர்கள் மேற்கொள்ளும் விசாரணையை ஏற்றுக்கொண்டு, அந்த விசாரணையை மக்கள் மன்றத்தில் நடத்த கோரினேன். அத்துடன் 37 சாட்சி ஆவணங்களையும் இணைத்திருந்தேன். ஆனால், இப்பொழுது– விசாரணையே தேவையில்லை, உங்களை நீக்குகிறோம் என கடிதம் அனுப்பியுள்ளனர். என் மீதான குற்றச்சாட்டுக்களை நிரூபிக்க முடியாதென்பதால் அந்த முடிவை எடுத்தார்கள்.

அத்துடன், அவர்கள் மீதான குற்றச்சாட்டையும் சுமத்தியிருந்தேன். ஒருவர் அல்லது இருவரின் விருப்பத்திற்கு அமைய இந்த அமைப்பு செயற்பட முடியாது. அவர்களின் பின்னால் மற்றவர்கள் இழுபட முடியாது. கட்சியை

02

**தரணி எங்கும் தமிழராய் இணைவோம்**

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## இது மக்கள் இயக்கம்...

ஜனநாயக பண்பு மிக்கதாக- பலரதும் நிலைப்பாட்டை உள்வாங்கக் கூடியதாக மாற்ற வேண்டுமென நான் வலியுறுத்தியது அவர்களால் பொறுக்க முடியவில்லை. 2018 இன் பின் தனிநபர் சர்வாதிகாரம் கட்சிக்குள் அதிகரித்தது. ஒரு சிலரது விருப்பத்தின்படிதான் கட்சி இயங்க வேண்டுமென அவர்கள் விரும்பினார்கள். நான் முட்டுக்கட்டையாக இருப்பதால் பிரச்சனை வெடித்தது.

ஒருவர் அல்லது இருவர் நினைப்பதன்படி ஏன் நடக்க வேண்டுமென கேட்டபோது- உங்களிற்கு அனுபவம் காணாது என்பது.

2010இல் தமிழ் தேசிய கூட்டமைப்பிலிருந்து வெளியேறிய போது, இரா.சம்பந்தன் தன்னிச்சையாக நடக்கிறார், மற்றவர்களின் கருத்தை கேட்கவில்லையென குற்றம்சாட்டப்பட்டது. இப்பொழுது அதே விதமாகவே முன்னணி நடக்கிறது.

கட்சிக்கு நிதி வழங்குபவர்கள்- கட்சிக்குள் நிதி மோசடி நடப்பதாக பல குற்றச்சாட்டுக்கள் தொடர்ந்து வந்தன. உள் விவகாரங்களை வெளியில் சொல்ல தேவையில்லை, ஆனால் இதை கட்சிக்குள் இல்லாமல் செய்து, தூய்மையான கட்டமைப்பை உருவாக்க ஒரு நிதிப்பிரிவை உருவாக்க முயற்சித்தேன்.

அதையும் ஒரு சிலர் விரும்பவில்லை. என் மீதான நடவடிக்கைக்கு அதுவும் ஒரு காரணம்.

கட்சியை ஜனநாயக பண்பற்றதாகவும், நிதி விவகாரத்தில் சீரான தன்மையற்றதாகவும் வைத்திருக்க முயற்சிக்கிறார்கள்.

எனது தனிப்பட்ட பணத்தை கட்சிக்கு வழங்கியுள்ளேன். கட்சியின் கடன் அழைப்பதற்கு பணம் வழங்கியுள்ளேன். எனது உழைப்பு நேரத்தை கட்சி வளர்ச்சியில் அர்ப்பணித்தேன்.

2010இல் கட்சி செயற்பாட்டை ஆரம்பித்தபோது, என்னுடன் இணைந்த இளைஞர்களே கட்சியை வளர்த்தன. நான் முன்னெடுத்த சமூக செயற்பாடும் அதில் முக்கிய பங்கு வகித்தது.

இன்று கஜேந்திரகுமார், கஜேந்திரனுக்கு என்னுடன் சேர்ந்த பயணிக்க முடியாதென்றால், தமிழ் தேசிய மக்கள் முன்னணியை பலியிட கூடாது. அது தமிழ் மக்களின் எதிர்காலத்திற்கான கட்சி. 2010, 2012 காலகட்டங்களில் கட்சி கட்டமைப்பை நானே உருவாக்கினேன். கட்சி கட்டமைப்பை உருவாக்க வேண்டாமென கஜேந்திரகுமார் தெரிவித்த போதும், அவர் அதை மறுத்தார். நான் பலமுறை போராடியும் பலனிருக்கவில்லை.

கட்சி கட்டமைப்பை உருவாக்கி, பலரை உள்ளீர்த்தால் கட்சி தலைமைத்துவத்திற்கு ஆபத்துள்ளது, எனக்கு இதில் நீண்ட அனுபவம் உள்ளதென கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார். தனது தாத்தாவை போல தன்னையும் தூக்கியெறிவார்கள் என்றார்.

இல்லையென நான் மறுத்து, அவரது தலைமைத்துவத்தை பாதுகாக்கும் சில ஏற்பாடுகளை செய்யலாமென கூறி, அவருக்கு உத்தரவாதங்களை கொடுத்தேன். உத்தரவாதங்கள், எனது திட்டங்களில் திருப்தியடைந்த பின்னரே, கட்டமைப்பை உருவாக்குங்கள் என்றார்.

நான் கட்சி உறுப்பினர்களை சந்திக்கவும் தடை விதிக்கப்பட்டுள்ளது. எமது கட்சியின் உறுப்பினர்கள் சென்று கேட்டபோது அவர்களுடன் சண்டைக்கு போகிறார்கள். அதனால் ஏராளமான கட்சி உறுப்பினர்கள் விரக்தியடைந்துள்ளனர். என்னை நீக்குவது தனியே மணிவண்ணனை நீக்குவதல்ல. கொள்கை வெல்ல வேண்டுமென எம்மோடு அணி திரண்டவர்கள், எங்களுடனுள்ள ஆயிரக்கணக்கான இளைஞர்களை நீக்குவதாகவே அமையும்.

தேசிய அமைப்பாளர் பொறுப்பிலிருந்து என்னை நீக்குவதாக கட்சி கடிதம் அனுப்பியிருந்தது. அது ஏன் என்பதை விளக்குகிறேன்.

கடந்த ஜனாதிபதி தேர்தலையொட்டி கட்சிக்குள் பல குழப்பங்கள் நிலவியது. அப்போது, தனிப்பட்ட காரணங்கள் மற்றும் சில காரணங்களினால் பொதுத் தேர்தலில் போட்டியிட மாட்டேன், ஆனால் கட்சியின் வெற்றிக்காக பாடுபடுவேன் என்பதை கூறினேன். ஆனால் கஜேந்திரகுமாரும், கஜேந்திரனும் அதற்கு உடன்படவில்லை. நான் எப்படியும் தேர்தலில் போட்டியிட வேண்டுமென என்னிடம் மன்றாடினார்கள். கட்சி உறுப்பினர்கள், எனது உறவினர்களை சந்தித்து எப்படியாவது மணிவண்ணனை போட்டியிட வையுங்கள் என சொல்லுங்கள், மணிவண்ணன் போட்டியிடாவிட்டால படுதோல்வியடைந்து விடுவோம், அவரை போட்டியிடுமாறு சொல்லுங்கள் என எல்லா உறுப்பினர்களிடமும் கேட்டார்கள். உறுப்பினர்கள் என்னில் கோபித்தார்கள். நீங்கள் கட்டியெழுப்பிய அமைப்பில் போட்டியிடவில்லையா என கேட்டார்கள். நான் போட்டியிடாததால் எனது கட்சி தோல்வியடைய கூடாதென்பதற்காக வேட்பாளர் பட்டியலில் எனது பெயரை இணைக்க சம்மதித்தேன்.

கஜேந்திரகுமாரும், கஜேந்திரனும் மிக மன்றாட்டமாகத்தான் என்னிடம் கேட்டார்கள்.

நான் கொள்கையில்லதவனாக, கொள்கை தெரியாதவனாக 10 வருடம் இயங்கியிருந்தால் ஏன் என்னிடம் மன்றாட வேண்டும்?. சம்பந்தன் கொள்கையை கைவிட்டு விட்டார் என சொல்லி பிரிந்தோம், விக்னேஸ்வரன் கொள்கையின் பிரச்சனையுள்ளது என கூறி ஒன்றுசேர மறுத்தோம், ஆனால் மணிவண்ணனின் கொள்கையில் பிழையுள்ளது என்றாலும் கெஞ்சினோம். கொள்கையில்லாதவர் என்றால் ஏன் கெஞ்ச வேண்டும்? என்னை விரட்டியல்லவா விட்டிருக்க வேண்டும்.

கொள்கை என்னவென்பதில் எனக்கு மிக தெளிவுள்ளது. ஜனாதிபதி தேர்தலை புறக்கணிப்பதுதான் தமிழர்களின் கொள்கையென்றால் அதை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன். 1978ஆம் ஆண்டு ஜனாதிபதி முறை கொண்டு வரப்பட்டது. அதற்கு முன்னரே இனப்பிரச்சனையென்பது பூதாகரமாக இருந்தது. 1976 ஆண் ஆண்டே தமிழீழ பிரகடனம் செய்யப்பட்டு விட்டது. ஜனாதிபதி தேர்தலை புறக்கணிப்பதல்ல தமிழர்களின் கொள்கை. எனக்கு கொள்கை தொடர்பில் யாரும் வகுப்பெடுக்க வேண்டிய அவசியமில்லை.

வேட்புமனுவில் கையெழுத்திட்ட அன்று, வேட்பாளர்களிற்கிடையிலான சந்திப்பு நடந்தது. அப்போது- கொள்கைக்கான கூட்டணி, ஆசனத்திற்காக சிறுமைப்படுத்தக் கூடாது, கொள்கையையும், சைக்கிள் சின்னத்தையும் முன்னிலைப்படுத்தி போட்டியிட வேண்டும், எந்தவொரு வேட்பாளரின் விருப்பு வாக்கிலக்கத்தையும் முன்னிலைப்படுத்த வேண்டும் என்றேன்.

அத்துடன் 10 வேட்பாளர்களும் இணங்க வேண்டும், ஒரு ஆசனம் கிடைத்தால் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும், இரண்டு ஆசனம் கிடைத்தால் செ.கஜேந்திரனும், மூன்று ஆசனம் கிடைத்தால், மற்றையவர்கள் சுழற்சி முறையில் ஆசனத்தை பகிரலாம், எனக்கு அந்த ஆசனம் தேவையில்லையென ஒரு கோரிக்கையையும் முன்வைத்தேன். ஆனால் அது ஏகமனதாக நிராகரிக்கப்பட்டது. காரணம், பலர் கட்சி வெற்றியடைந்த பின்னர் போட்டியிட முன்வந்தவர்களிற்கு பதவி ஆசை, பாராளுமன்ற ஆசை வந்திருக்க கூடும். ஆனால் நாம் கொள்கைக்காக செயற்பட்டவர்கள் தேர்தலில் தோல்வியடைவோம் என தெரிந்தும் போட்டியிட்டவர்கள்.

பின்னர் தேர்தல் காலத்தில் மோசமான- அருவருக்கத்தக்க நடவடிக்கைகளில் வேட்பாளர்கள் ஈடுபட்டனர். எனக்கு எதிராக அவதூறு பரப்பும் நடவடிக்கையில், தோற்கடிக்க வேண்டுமென்ற முனைப்பில் பதவி வெறியர்கள் செயற்பட்டனர். எனக்கு வேலை செய்யக்கூடாதென உறுப்பினர்களை தடுத்தார்கள். நான் ரோவிடம் பணம் வாங்கி தேர்தலில் போட்டியிடுவதாக அருவருக்கத்தக்க பிரச்சாரங்களில் ஈடுபட்டனர்.

அதன் உச்சம், தேர்தல் முடிந்த அன்று இரவும் நடந்தது. தேர்தல் முடிந்த பின்னர் நானும், நண்பர் சட்டத்தரணி அர்ஜூனாவும் தலைவர் கஜேந்திரகுமாரை சந்தித்து, ஏன் இப்படியான கீழ்த்தரமான நடவடிக்கையில் ஈடுபட்டீர்கள் என்றேன். அப்படி யாருமே செயற்படவில்லை. அது பொய் என்றார்.

“அது பொய்யான செய்தி மணி. இது என்னையும் உன்னையும் பிரிக்க, கட்சி தலைமையை சிதைக்க யாரோ உன்னிடம் பொய் சொல்கிறார்கள்“ என்றார்.

அது பொய் எனில், சொன்னவர்களை உங்களிடம் அழைத்து வருகிறேன். எனக்கு வேலை செய்ய வேண்டாமென கட்சி செயலாளர் கஜேந்திரனால் சொல்லப்பட்டதாக கூறியவர்களை அழைத்து வருகிறேன் என்றேன்.

இல்லை. என்னையும், உன்னையும், கஜேந்திரனையும் பிரிக்க பொய் சொல்வார்கள். அதை நம்பாதே என்றார்.

தேர்தல் காலத்தில் செ.கஜேந்திரன் எனக்கு எதிரான சதி செயற்பாட்டில் ஈடுபடவில்லையென்றால், அவரை மறுக்கச் சொல்லுங்கள். அவரது பிள்ளையின் மீது சத்தியம் செய்யச் சொல்லுங்கள் என்றேன். செய்ய முடியாது என்றார். சரி, என் மீது சத்தியம் செய்யுங்கள் என்றேன். அதுவும் முடியாது என்றார்.

சரி, இந்த உறுப்பினர்களிடம், அது பொய் பிரச்சாரம் என சொல்லுங்கள் என்றேன்.

நிச்சயமாக சொல்கிறேன். நாம் ஒன்றாக பயணிக்க வேண்டும் என கஜேந்திரகுமார் சொன்னார். பின்னர் முள்ளிவாய்க்காலில் இருந்து என்னை தேசிய அமைப்பாளர் பதவியிலிருந்து நீக்குவதாக கஜேந்திரகுமார் தெரிவித்தார்.

மத்தியகுழு முடிவெடுத்ததாக சொன்னார். யார் மத்தியகுழு என தேடிப்பார்த்தேன். எமது மத்தியகுழு பற்றிய திட்டவட்டமான வரையறையில்லை. கட்சிக்கு மத்தியகுழு ஆலோசனை சபை அவசியம், இரண்டு சபைகளின் அனுமதியுடன்தான் முடிவெடுக்க வேண்டும் என்றேன். அது கணக்கிலெடுக்கப்படவில்லை. யாருடைய ஆலோசனையுமில்லாமல், நாங்கள் ஒருவர் அல்லது இருவர் எடுக்கும் முடிவுகளின் பின்னால் இழுபட்டு வாருங்கள் என யாராவது ஒருவர் அல்லது இருவர் நினைத்தால் அதற்கு தமிழ் தேசிய மக்கள் முன்னணியை நாம் பலியிட முடியாது. அதற்கு வேறு அமைப்புக்கள் உள்ளன. அகில இலங்கை தமிழ் காங்கிரஸை இதற்கு பயன்படுத்தி கொள்ளட்டும்.

மத்தியகுழுவில் 5 மாவட்ட அமைப்பாளர்கள், பொருளாளர் கலந்து கொள்ளவில்லையே, எது மத்தியகுழு என ஒரு பதில் அனுப்பினேன். நாம் சொல்வதற்கு தலையாட்டுபவர்கள் மத்தியகுழுவில் தேவையில்லை. மக்கள் நலனினடிப்படையில் சிந்திக்க தெரிந்தவர்களே மத்தியகுழுவிற்கு தேவை.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மீண்டும் கூடியது. முதல் கூடிய மத்தியகுழு வேறு. ஞாயிற்றுக்கிழமை கூடிய மத்தியகுழு வேறு.

பதவி ஆசை இருப்பவர்கள் என்னிடம் பதவியை கேட்டால் நான் விட்டுக் கொடுப்பேன். ஆனால் எதேச்சதிகாரமாக பதவியை பறிக்க முயல்வதால் அதற்கு இடம்கொடுக்காமல் தொடர்ந்து போராடுவேன். எனக்கு எதிரான அநீதிக்கு எதிராக போராட முடியாத நான் எப்படி இனத்திற்கு எதிரான அநீதிக்காக போராட முடியும். அதனால்தான் போராடுகிறேன்.

கட்சிக்குள் என்ன நடக்கிறது என உறுப்பினர்களிற்கு விளக்கமளிக்கப்படுவதில்லை. மத்தியகுழுவின் முடிவு, பின்னால் வாருங்கள் என்றுதான் சொல்கிறார்கள்.

கட்சியின் பொதுச்சபையை கூட்டுவது குறித்து ஆராய்கிறேன். நடந்த விடயங்களை பொதுச்சபைக்கு முன்வைப்பேன். அவர்கள் என்னில் குற்றமுள்ளது, விலகும்படி கூறினால் விலகி விடுவேன். இன்றைய நிலையில் செல்வராசா கஜேந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துடன் இணைந்து செயற்பட முடியாத நிலையை அவர்கள் உருவாக்குகிறார்கள். இன்னொரு பெயரை வைத்து கட்சியை உருவாக்க அதிக நாள் செல்லாது. இது அல்ல எமது நோக்கம்.

தமிழ் தேசியவாதம் சிதைக்கப்பட்டு வருகிறது. 2020 தேர்தல் தமிழ் தேசியவாதத்திற்கு தோல்வி. மட்டக்களப்பில், யாழ்ப்பாணத்தில், அம்பாறையில் கோட்டா தரப்பினரே அதிக வாக்கு பெற்றனர். தமிழ் தேசிய தரப்புக்கள் பிளவடைந்திருந்தது, சரியாக செயற்படாமைதான் தோல்விக்கு காரணம். இந்த நிலையில் முன்னணியை உடைப்பது எனது நோக்கமல்ல.

இந்த கட்சியின் ஆரம்பகால உறுப்பினர்கள் எனக்கு இழைக்கப்பட்ட அநீதியை தட்டிக் கேட்கிறார்கள். 2018ஆம் ஆண்டு அரசியலுக்கு வந்தவர்கள்தான்- உள்ளூராட்சி தேர்தலில் கட்சி வெற்றியடைந்துவிட்டதென நினைத்து வந்தவர்கள்தான்- இப்படியான செயற்பாடுகளிற்கு துணை போகிறார்கள்.

எதிர்காலத்தில் அனைத்து தமிழ் தேசிய கட்சிகளையும் ஒன்று திரட்டி, தமிழ் தேசிய வாதத்தை உயிர்ப்போடு வைத்திருக்கும் நடவடிக்கையை நான் முன்னெடுக்கப் போகிறேன். அதற்கு அனைவரின் ஒத்துழைப்பும் அவசியம்.

கட்சியை விட்டு நீக்குவதாக அனுப்பப்பட்ட கடிதத்தை நான் ஏற்கவில்லை. விசாரணை நடத்தப்பட்டு, அதன் பின் நடவடிக்கையெடுத்திருந்தால் ஏற்றுக்கொண்டிருப்பேன். விசாரணையே நடத்தாமல் நடவடிக்கையெடுத்ததால் அதை ஏற்க மாட்டேன்.

இலட்சியத்திற்காக செயற்படுவதாக கூறிக்கொண்டு, பதவிக்காக சூழ்சி செய்யும் அமைப்பாக இதை வைத்திருக்க முடியாது.

முன்னணியின் ஒழுக்க சரத்துக்களை மீறியதாக கூறுகிறார்கள். ஆனால் அந்த கோவை எப்பொழுது, எப்படி வந்தது என தெரியாது. நான்தான் கட்சியின் தேசிய அமைப்பாளராக இருந்தேன். ஒரு ஒழுக்கக் கோவையை நான்தான் தயாரித்து உறுப்பினர்களிற்கு அனுப்பினேன். எனக்கு எதிரான விசாரணைக்காக அவசரமாக அவர்களே ஒரு ஒழுக்கக்கோவையை தயாரித்துள்ளனர். ஏற்கனவே இருந்த ஒழுக்கக் கோவைக்கும், இப்பொழுது அனுப்பிய ஒழுக்கக் கோவைக்குமிடையில் வித்தியாமமுள்ளது.

யாரிடமும் நான் நிதி வாங்கி மோசடி செய்யவில்லை. அந்த தேவை எனக்கில்லை. நான்தான் இலட்சக்கணக்கான பணத்தை கட்சிக்கு வழங்கியுள்ளேன். 2018 தேர்தல் முடிந்ததும், கட்சிக்கு ஏற்பட்ட கடன் நெருக்கடியை நான்தான் அடைத்தேன். தலைவர், செயலாளர் கையை விரித்து விட்டார்கள். அந்த பணம் எனக்கு மீளளிக்கப்படவேயில்லை என்றார்.

## வன்னியில்...

கொடுக்க நடவடிக்கை எடுத்தோம். பிழையான வழிகளில் சென்றிருந்த இளைஞர்கள், யுவதிகளை சரியான வழியில் செல்வதற்கும் வழிகாட்டியிருந்தோம். அந்த கடமைகளை நாம் கச்சிதமாக செய்தோம்.

அப்போதைய வவுனியா மாவட்ட செயலாளர் சாள்ஸ் மற்றும் அப்போதைய மீள்குடியேற்ற அமைச்சர் றிசாட் பதியுதீன் அவர்களுடன் இணைந்து அதனை முன்னெடுத்தோம். அதனை சிறப்பாக செய்ய அரச அலுவலர்களும் கைகோர்த்து இருந்தார்கள்.

இன்று வன்னி பிரதேசத்தை பார்க்கின்ற போது மிகவும் கவலைக்கிடமான நிலையை அவதானிக்கின்றோம். இங்கு இருக்கின்ற அதிகளவிலான வனப் பிரதேசங்கள் அவசர அவசரமாக, தீவிரமாக அழிகப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கையில் இருந்து நாங்கள் விடுபட வேண்டும். வடக்கு பிரதேசத்தில் காடுகள் அழிக்கப்படுவது என்பது வடக்குக்கு மட்டுமல்ல முழு நாட்டிற்கும் அபாயகரமானது. என்றார்.

## ஆறு கோடி ரூபா...

சந்தேக நபர்கள் ஹட்டன் மற்றும் பாணந்துறை பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்பதுடன் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்காக இமதுவ பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

## தமிழ்த் தேசிய...

அன்பர்கள் நிதியுதவி அளிக்குமாறும் வேண்டுகோள் விடுத்திருந்தார். இந்நிலையில் தேர்தல் முடிவடைந்து தமிழ்த் மக்கள் தேசியக் கூட்டணி ஒரு ஆசனத்தைக் கைப்பற்றியிருந்தது. சி.வி.விக்கினேஸ்வரன் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவுசெய்யப்பட்டார்.

இந்நிலையில் கட்சியினால் தேர்தல் வரவு செலவு அறிக்கை வெளியிட்டுவைக்கப்பட்டுள்ளது. தமிழ்த் தேசிய கட்சிகள் வெளிநாட்டிலிருந்து தேர்தல் செலவுக்கு என கோடிக்கணக்கான பணத்தினைப் பெற்றுவகின்றன. எனினும் எந்தக் கட்சியும் தமது தேர்தல் வரவு செலவு அறிக்கையை வெளியிடுவதில்லை. இந்நிலையில் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி தேர்தல் வரவு செலவு அறிக்கையை வெளியிட்டு ஏனைய தரப்புக்களுக்கு வயிற்றில் புளியைக் கரைத்துள்ளார்.

# கடலில் மூழ்கி நபரொருவர் பலி



கிரான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள நாவத்தை சின்ன வெம்பு கடலில் மீனவர் ஒருவர் கடலில் மூழ்கி உயிரிந்துள்ளார்.

பாலையடித்தோன சந்தி வெளியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான இ.செல்லத்துரை வயது (55) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வழக்கம் போல் கரைவலைத் தொழிலுக்குச் சென்றவர் கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

உழவு இயந்திரத்தில் இணைக்கப்பட்ட கயிறு அறுந்து கடலில் சென்றுள்ளது.

அதனை மீண்டும் உழவு இயந்திரத்தில் இணைக்கும் முகமாக கடலில் எடுக்கச் சென்ற வேளை நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பாக கல்குடா பொலிசார் மேலதிக விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

# பெண்களுக்கு எதிரான குற்றங்களின் எண்ணிக்கை ஏழு வீதம் அதிகரிப்பு!



நாட்டில் கடந்த ஆண்டு பெண்களுக்கு எதிராக நடந்த குற்ற சம்பவங்களின் எண்ணிக்கை 7 சதவீதம் அதிகரித்துள்ளதாக தேசிய குற்ற ஆவணக் காப்பகம் தெரிவித்துள்ளது.

ஒவ்வொருநாளும் சராசரியாக 87 பாலியல் துஷ்பிரயோக சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக அந்த காப்பகம் குறிப்பிட்டுள்ளது.

உத்தரப்பிரதேசத்தில் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளான பெண் ஒருவர் உயிரிழந்துள்ள நிலையில் குறித்த காப்பகம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையிலேயே மேற்படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையில், "கடந்த 2017இல் 32 ஆயிரத்து 559 பாலியல் துஷ்பிரயோக வழக்குகள் பதிவாகி இருந்தன. இதன்பின் 2018இல் பதிவான பாலியல் துஷ்பிரயோக வழக்குகளின் எண்ணிக்கை 33 ஆயிரத்து 359 ஆக உயர்ந்துள்ளது.

இதில் 30.9 சதவீத வழக்குகள் பெண்ணுக்கு கணவன் அல்லது கணவனின் உறவினர்கள் இழைத்த குற்றங்களால் பதிவு செய்யப்பட்ட வழக்குகள்.

கடந்த 2018ல் பெண்களுக்கு எதிரான குற்ற சம்பவங்களால் மூன்று இலட்சத்து 78 ஆயிரத்து 236 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

2019ல் பதிவு செய்யப்பட்ட இந்த வழக்குகளின் எண்ணிக்கை நான்கு இலட்சத்து 5 ஆயிரத்து 861 ஆக உயர்ந்தது. இது 2018ஐ காட்டிலும் 7.3 சதவீதம் அதிகமாகும்.

கடந்த ஆண்டு ஒவ்வொரு நாளும் சராசரியாக 87 பாலியல் துஷ்பிரயோக வழக்குகள் பதிவாகின. கடந்த 2018ல் ஒரு இலட்சம் பெண்களில் 58.8 சதவீதம் பேருக்கு எதிராக குற்ற சம்பவங்கள் அரங்கேறின. இந்த விகிதம் 2019ல் 62.4 சதவீதமாக உயர்ந்தது.

கடந்த 2018ஐ காட்டிலும் 2019ல் குழந்தைகளுக்கு எதிராக நடந்த குற்ற சம்பவங்களின் விகிதம் 4.5 சதவீதம் உயர்ந்தது. 2019இல் குழந்தைகளுக்கு எதிரான குற்ற சம்பவங்களால் 1.48 இலட்சம் வழக்குகள் பதிவாகின.

இதில் 46.6 சதவீதம் கடத்தல் வழக்குகள் 35.3 சதவீதம் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான வழக்குகள் காணப்படுகின்றன" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சிறார்களின் அறிவை மேம்படுத்துவது அனைவரினதும் பொறுப்பு

நாட்டின் எதிர்கால சொத்தான சிறார்களின் அறிவை மேம்படுத்துவது அனைவரினதும் பொறுப்பு என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே ஜனாதிபதி இந்த விடயத்தை கூறியுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "எமது சிறுவர்கள் எமது தேசத்தின் எதிர்காலச் சொத்துக்கள். அவர்களை அறிவு ரீதியாக வளப்படுத்தி திறன் விருத்திக்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுப்பது முழு சமூகத்தினதும் பொறுப்பாகும்.

பிள்ளைகளின் உள, உடல், ஆரோக்கியத்தை வளப்படுத்துவதற்கு அளிக்கும் முக்கியத்துவத்தை போன்றே அவர்கள் நற்பண்புள்ளவர்களாக வளர்வதற்கான சூழலை உறுதிப்படுத்துவதும் அவசியமாகும்.

ஒரு நாடு தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் எவ்வளவு உயர்ந்த அபிவிருத்திப் படிநிலைகளை அடைந்து கொண்டாலும், சமூகம் அன்பு, அறம் போன்ற அடிப்படை மானிடப் பண்புகளைப் பெற்றிருக்கவில்லை என்றால் அதனை ஒரு சிறந்த தேசமாக கருத முடியாது என நான் நம்புகிறேன்.

ஒரு சிறந்த தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கு நாம் எமது சிறுவர் தலைமுறையை சிறந்த ஒழுக்கப் பெறுமானங்களுடன் தொழிநுட்ப திறன்கள் மற்றும் மொழி அறிவைப் பெற்றவர்களாக வளப்படுத்த வேண்டும்.

உள, உடல். பலவீனங்களிலிருந்து விடுபட்ட பிரஜைகளைக் கொண்ட ஒரு நாட்டைக் கட்டியெழுப்புவதுவே எனது ஒரே எதிர்பார்ப்பாகும். எனக் குறிப்பிட்டுள்ளார்.

# போதைப் பொருளுடன் இருவர் கைது

ஐஸ் ரக போதைப் பொருளுடன் இருவர் நீர் கொழும்பில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிம்புலாபிட்டி பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பிலேயே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது, 500 கிராம் ஐஸ் ரக போதைப்பொருள் சந்தேகநபர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளதாக என பொலிஸார் தெரிவித்தனர்.

# கல்விக் கூட்டுறவுச் சங்கத்தின் யாழ்ப்பாண சேவை திறப்பு







கல்விக் கூட்டுறவுச் சங்கத்தின், யாழ் மாவட்ட வாடிக்கையாளர்களின் நலன் கருதி, வாடிக்கையாளர் சேவை நிலையம் 30 ஆம் திகதி புதன்கிழமை கோண்டாவில் இந்து கல்லூரியில் திறந்து வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேராசிரியர் க. தேவராஜா இந்நிலையத்தை திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் யாழ்ப்பாண வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் பி.சதீஸ்குமார், சங்கத்தின் பிரதிச் செயலாளர், வடமாகாண பிரதி முகாமையாளர் நிலுக் ரத்நாயக்க, வடமாகாணப் பணிப்பாளர் ஜெ.வோல்வின், மேம்படுத்தல் உத்தியோத்தர் சீ.சுதாகரன், வலய முகாமையாளர் கு.சுரேன், உதவிக்கல்விப் பணிப்பாளர் சி.கணேசலிங்கம் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

கல்விச் கூட்டுறவுச் சங்கம், கல்வி சார் ஊழியர்களுக்கான நலன்களை நோக்காகக் கொண்டு செயற்படும் ஒரு அமைப்பு. இந்நிறுவனம் இலங்கை பூராகவும் 2 இலட்சத்துக்கு அதிகமானவர்கள் அங்கத்தவர்களை கொண்டு இயங்குகின்றது.

கல்விசார் ஊழியர்களுக்கான குறைந்த வட்டி வீதத்திலான கடன்கள், ஓய்வூதியம், அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கான புலமைப்பரிசில், பல்கலைக்கழக புலமைப்பரிசில், மரணாதார கொடுப்பனவு, ஓய்வூ விடுதிகள் என பலதரப்பட்ட சேவைகளை வழங்கி வருகின்றது.

## தனு ரொக் குழுவை இலக்கு வைத்து

# தொடரும் வாள் வெட்டு!

யாழ்ப்பாணம் – நீர்வேலி சந்திக்கு அண்மையில் உள்ள வீடொன்றுக்குள் புகுந்த வன்முறைக் கும்பல் இளைஞன் மீது சராமாரியாக வாள் வெட்டுத் தாக்குதலை நடத்தியதோடு, மகனைக் காப்பாற்ற முற்பட்ட தாயார் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இருவரும் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த வன்முறைச் சம்பவம் நேற்று (புதன் கிழமை) இரவு 8 மணியளவில் இடம்பெற்றது.

சம்பவத்தில் பு.சிவா (வயது -30) அவரது தாயார் ரேணுகா (வயது -50) ஆகிய இருவர் மீதே இவ்வாறு வாள்வெட்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

3 மோட்டார் சைக்கிள்களில் வந்த 6 பேர் அடங்கிய கும்பலே இந்தத் தாக்குதலை மேற்கொண்டுள்ளது.

வன்முறைக் கும்பல் வாள்கள், கம்பிகள் கொண்டே தாக்குதலை நடத்தியுள்ளது. மேலும் வீட்டிலிருந்த பெறுமதியான பொருட்களை அடித்துச் சேதப்படுத்தியும் தீயிட்டு எரித்த வன்முறைக் கும்பல், அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

வாள் வெட்டுக்கு இலக்கான குறித்த நபர் “தனு ரொக்” எனும் வாள் வெட்டுக்குழு என பொலிசாரினால் கூறப்படும் குழுவின் தலைவர் என பொலிசாரினால் அடையாளப்படுத்தப்பட்டுள்ள தனு என்பவரின் நெருங்கிய சகா என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அதேவேளை தனு ரொக் குழுவின் தலைவர் என அடையாளப்படுத்தப்பட்டுள்ள தனு மீது கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம் பெருமாள் கோவிலுக்கு அருகில் வைத்து வாள் வெட்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதில் படுகாயமடைந்த நிலையில் தனு யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

தனு மீது தாக்குதல் நடாத்திய குற்றசாட்டில் ஆவா குழு என பொலிசாரினால் அடையாளப்படுத்தப்பட்ட குழுவின் தலைவர் என அடையாளப்படுத்தப்பட்டுள்ள வினோதன் அவரின் நெருங்கிய சகாவான அசோக் உள்ளிட்ட ஐவர் நீதிமன்ற உத்தரவில் எதிர்வரும் 09ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையிலையே தனுவின் சகாவின் மீது நேற்றைய தினம் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.





## ஆவா வினோதன் விளக்கமறியலில்!

தனுரொக் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் பொலிஸாரால் தேடப்பட்டு வந்த வினோதன் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நேற்று சரணடைந்தார். அவரைவரும் ஒக்டோபர் 9ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

யாழ்ப்பாணம் மணிக்கூட்டு வீதி பெருமாள் கோவிலடியில் வைத்து கடந்த 26ஆம் திகதி சனிக்கிழமை மானிப்பாயைச் சேர்ந்த தனுரொக் என்ற இளைஞன் மீது வாள் வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. கார் ஒன்றில் வந்த வன்முறைக் கும்பலைச் சேர்ந்த சிலர் மோட்டார் சைக்கிளில் சென்ற தனுரொக் மீது வாள்வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டனர்.

சம்பவத்தில் படுகாயமடைந்த தனுரொக், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலையப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

தனுரொக் வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையில் கொக்குவிலைச் சேர்ந்த மோகன் அசோக் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டார். அத்தோடு மேலும் மூவர் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டனர். அத்துடன், காரின் உரிமையாளரை அழைத்து வாக்குமூலம் பெற்ற பொலிஸார், அவரை விடுவித்திருந்தனர்.

கொலை முயற்சி சந்தேக நபர்கள் நால்வர் மீதும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. அவர்கள் நால்வரும் வரும் 9ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டது.

இந்த நிலையில் தனுரொக்கின் வாக்குமூலத்தின் அடிப்படையில் இணுவிலைச் சேர்ந்த ஆவா என பொலிஸாரால் அழைக்கப்படும் வினோதன் தேடப்பட்டு வந்தார். அவர் நேற்று தனது சட்டத்தரணி ஊடாக யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் சரணடைந்தார். அவரையும் வரும் 9ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

## 4. 20ஆவது திருத்தச் சட்டம்:

# 25 மனுக்கள் குறித்த பரிசீலனை நிறைவு!

அரசியலமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டமூலத்தை சவாலுக்கு உட்படுத்தி தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீதான பரிசீலனையை நாளை (வெள்ளிக்கிழமை) முற்பகல் 9.30 மணிக்கு உயர்நீதிமன்றத்தில் இடம்பெறவுள்ளது.

20ஆவது திருத்தச் சட்டமூலத்தை சவாலுக்கு உட்படுத்தி 39 மனுக்கள் உயர்நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

அந்த மனுக்கள் மீதான பரிசீலனை பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, நீதியர்களான புவனேக அலுவிஹார, சிசிர டி ஆப்று, ப்ரியந்த ஜயவர்தன, விஜித் மலல்கொட ஆகிய ஐவர் கொண்ட ஆயம் முன்னிலையில் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டது. இதன்போது 7 மனுக்கள் குறித்து ஆராயப்பட்டது.

குறித்த பரிசீலனை நேற்று இரண்டாவது நாளாகவும் தொடர்ந்த நிலையில், நேற்று இரவு 7.20 மணி வரை மனுக்கள் மீதான பரிசீலனைகள் இடம்பெற்றன.

இதன்போது 20ஆவது திருத்தச் சட்டமூலத்தை சவாலுக்கு உட்படுத்தி தாக்கல் செய்யப்பட்டுள்ள 39 மனுக்களில், 32 மனுக்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் தங்களது சமர்ப்பணங்களை முன்வைத்து நிறைவு செய்தனர். இந்த நிலையில், 25 மனுக்கள் குறித்து ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

இதன்போது மனுதாரர்கள் சார்பாக முன்னிலையாகிய சட்டத்தரணிகள், உத்தேச 20ஆவது திருத்தத்தின் ஊடாக அடிப்படை உரிமைகளுக்கு வரையரைகள் விதிக்கப்படும் என்பதுடன், தகவல் அறியும் உரிமைக்கும் பாதிப்பு ஏற்படும் என தெரிவித்தனர்.

20ம் திருத்தச் சட்டமூலத்தின் சில உள்ளடக்கங்களில், நீதித்துறை சுயாதீனம், அடிப்படை உரிமை என்பன தொடர்பில் தாக்கம் செலுத்துவதாக குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு, மக்கள் வசமுள்ள நீதிமன்றத்தின் அதிகாரங்களை கையக்கப்படுத்தும் நிலைமை ஏற்படும் என்றும் தெரிவித்தனர்.

எனவே 20ஆவது திருத்தச் சட்டமூலத்தை நிறைவேற்ற வேண்டுமாயின் சர்வஜன வாக்கெடுப்பு அவசியமானது எனவும் தெரிவித்தனர்.

இதனையடுத்து மேலதிக பரிசீலனை நாளைய தினம் வரை பிற்போடப்பட்டுள்ள நிலையில், எஞ்சியுள்ள மனுக்கள் மீதான சமர்ப்பணங்கள் இடம்பெறவுள்ளன.

20 ஆவது அரசியலமைப்பு திருத்த வரைபு எதிர்க்கட்சியின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் நாடாளுமன்றத்தில் கடந்த 22 ஆம் திகதி நீதி அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரியினால் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்நிலையில் ஒரு வார காலத்தினுள் இதற்கு எதிராக யாரேனும் உயர் நீதிமன்றத்தை நாடினால் 21 நாட்களுக்கு 20வது திருத்தம் தொடர்பாக எந்த முன்னெடுப்பையும் நாடாளுமன்றத்துக்குள் முன்னெடுக்க முடியாது என்பது குறிப்பிடத்தக்கது.

# வவுனியாவில் நடைபெற்ற இந்து எழுச்சி ஊர்வலம்!!





இந்துக்கள் எதிர்நோக்குகின்ற முக்கிய பிரச்சினைகளை உள்ளடக்கிய ஆறு அம்ச கோரிக்கைகளை முன்வைத்து அனைத்து வவுனியா மாவட்ட இந்து அமைப்புக்களின் ஏற்பாட்டில் மாபெரும் பேரணி இடம்பெற்றது.

குறித்த பேரணி இன்று (01) காலை 8.30 மணியளவில் குருமன்காடு காளி கோவில் முன்றலில் இருந்து ஆரம்பமாகி காலை 11.40 மணியளவில் வவுனியா கந்தசுவாமி கோவில் முன்றலில் முடிவடைந்தது.

வவுனியா மாவட்டம் மட்டுமல்லாது உலகெங்கும் வாழ்கின்ற இந்துக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை ஒழுங்குப்படுத்தி வரிசைப் படுத்தி வவுனியாவில் இருக்கின்ற இந்த அமைப்புக்கள் ஒன்று சேர்ந்து இந்த பேரணியை முன்னெடுத்திருந்தனர்.